# விபரத்தாள் - உடனடி பள்ளிச் சமூகப் பாதுகாப்பு ஆணை

## உடனடி பள்ளிச் சமூகப் பாதுகாப்பு ஆணை என்ன செய்கிறது?

முதல்வர்கள், பள்ளித்துறை, பயிற்சி அலுவலர்கள் போன்ற சிலர் ‘அங்கீகரிக்கப்பட்ட நபர்கள்’ என்று அழைக்கப்படுகின்றனர். அவர்களுக்கு நீங்கள் பள்ளிக்குச் செல்கையில் அல்லது ஈடுபடுவதில் பின்பற்ற வேண்டிய விதிகளை அமைக்கவும் ஆணைகளை உருவாக்கும் அதிகாரம் உள்ளது.

பள்ளி நடவடிக்கைகள் நிகழும் பள்ளி மைதானங்கள் அல்லது பிற இடங்களில் நீங்கள் நுழைவதை அல்லது தங்கியிருப்பதிலிருந்து ஓர் ஆணை உங்களைத் தடுக்கிறது. இந்த ஆணையில் எப்போது அல்லது எந்த இடங்களில் இந்த ஆணை பொருந்தாது போன்ற விபரங்கள் அடங்கியிருக்கலாம்.

பள்ளிச் சமூகப் பாதுகாப்பு ஆணை குறித்த மேலும் விபரங்களை இங்கே காணலாம். பள்ளிச் சமூகப் பாதுகாப்பு ஆணை என்ன செய்கிறது என்பதை நீங்கள் புரிந்து கொள்ள உதவுவதற்கு இங்கே காணொளியை நீங்கள் காணலாம்.

## ஓர் உடனடி ஆணை எத்தனை காலம் நீடிக்கும்?

ஆணையில் இந்த விதிகள் எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதையும் உங்களுக்குச் சொல்கிறது. ஒரு ஆணையானது அமலில் இருக்கக்கூடிய அதிகபட்ச காலம் 14 நாட்கள்.

## பள்ளியில் என் குழந்தை இருந்தால், ஒரு உடனடி ஆணையை நான் பின்பற்ற வேண்டியிருக்கும் நிலையில் அவர்களுக்கு இப்போது என்ன நிகழும்?

உங்கள் பள்ளி இந்த ஆணை உங்கள் குழந்தையை எவ்வாறு பாதிக்கும் என்பதையும் அவர்கள் மீது நீங்கள் கொண்டுள்ள அக்கறை குறித்தும் கவனமாகப் பரிசீலித்துள்ளது. ஓர் ஆணையானது உங்கள் பராமரிப்பைத் தடுப்பதற்கோ அல்லது அவர்கள் கல்வியில் உங்கள் ஈடுபாட்டைத் தடுப்பதற்கோ ஏற்படுத்தப்பட்டதல்ல.

ஓர் ஆனையை உங்களுக்குத் தந்த உடனேயே உங்கள் பள்ளி ‘செய்தித் தொடர்புகள் மற்றும் அணுகல் நெறிமுறைகளை’ உங்களுக்கு வழங்கும். இதில் அடங்கியிருப்பவை:

- உங்கள் குழந்தையின் கல்வி பற்றி உங்களுக்கு எவ்வாறு தெரிவிக்கப்படும்
- உங்கள் குழந்தை எவ்வாறுபள்ளிக்குச் செல்ல முடியும் மற்றும்பள்ளி நடவடிக்கைகளில் எவ்வாறுபத்திரமாகப் பங்கேற்க முடியும்
- உங்கள் குழந்தைக்கான ஆதரவையும் கவனித்துக் கொள்ளுவதையும் உறுதி செய்வதற்கு அவர்கள் என்ன செய்வார்கள்.

**ஓர் உடனடி ஆணையை நான் ஏற்காவிட்டால் என்ன?**

இந்த ஆணையை உருவாக்கிய அங்கீகரிக்கப்பட்ட நபர் ஆணையை உருவாக்கியபின் அவர்கள் 'தொடர்ச்சியான பள்ளிச் சமூகப் பாதுகாப்பு ஆணையை' உருவாக்க வேண்டுமா அல்லது ஆணையை இரத்து செய்ய வேண்டுமா என்பது குறித்துப் பரிசீலிப்பதற்காக உடனடியாக அதை மதிப்பாய்வு செய்வார். தொடரும் ஆணைகள் குறித்து மேலும் தகவல்களை கல்வி மற்றும் பயிற்சித்துறை இணையதளத்தில் இங்கே காணலாம்.

ஒரு குறிப்பிட்ட முறையில் நீங்கள் ஏன் நடந்துகொண்டீர்கள், அது எவ்வாறு உங்களிடம் அல்லது குழந்தையிடம் தாக்கத்தை ஏற்படுத்தும் அல்லது அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டிய வேறு ஏதேனும் குறித்த விளக்கத்தை எந்த நேரத்திலும் நீங்கள் சமர்ப்பிக்கலாம். உதாரணமாக, உங்கள் குழந்தையிடம் குறையாடு இருப்பதால் அவர்கள் தொடர்ந்து பள்ளிக்குச் செல்வதற்கு உதவுவதை உறுதிசெய்ய வேண்டியிருப்பது குறித்து பள்ளிக்கு நீங்கள் சொல்ல விரும்பலாம்.

ஓர் எழுத்துப்பூர்வ சமர்ப்பிப்பு என்பது மின்னஞ்சல் அல்லதுகடிதத்தைஅதிகாரப்பூர்வ நபருக்கு அனுப்புவதாகும். கல்வி மற்றும் பயிற்சித்துறை இணையதளத்தில் உள்ள மாதிரியுருவை நீங்கள் பயன்படுத்தலாம் இங்கே.

நீங்கள் எழுத்துப்பூர்வமாகச் சமர்ப்பிக்க விரும்பாவிட்டால் அதற்கு மாறாக வாய்மொழி சமர்ப்பிப்பைத் தருவதற்கு நீங்கள் கேட்கலாம். உங்களுக்காக குறைபாடுள்ளோருக்கு உதவும் நபர் அல்லது மொழிபெயர்ப்பாளர் போன்ற இன்னொருவரைச் சமர்ப்பிக்கும்படியும் நீங்கள் கேட்கலாம்.

**ஓர் ஆணையை நான் பின்பற்றாவிட்டால் என்ன நடக்கும்?**

ஆணையில் கூறப்பட்ட விதிகளை நீங்கள் பின்பற்றாவிட்டால், அந்த ஆணையை நீங்கள் பின்பற்றுவதற்கு பள்ளியானது குற்றவியல் நீதிமன்றத்தில் விண்ணப்பிக்கலாம்.

குற்றவியல் நீதிமன்றம் ஆணையைப் பின்பற்றாததில் தவறு உங்கள் பக்கம் என்று கண்டறிந்தால், அவர்கள்:

- நீங்கள் அபராதம்செலுத்தும்படி வலியுறுத்தலாம்
- ஆணைக்கு இணங்கி நடக்க வலியுறுத்தலாம்
- ஆணைக்கு இணங்கி நடக்க குறிப்பிட்ட நடவடிக்கையை எடுக்கும்படி வலியுறுத்தலாம்
- பொருத்தமானது என்று நீதிமன்றம் கருதும் வேறு எதையும் நீங்கள் செய்யும்படி வலியுறுத்தலாம்.

ஓர் ஆணையைப் பின்பற்றாததற்காக நீங்கள் சிறை செல்லவோ, குற்றவியல் பதிவோ அல்லது குற்றத்துக்கான அபராதம் செலுத்தவோ வேண்டியிருக்காது.

**எனக்கு மொழிபெயர்ப்பாளர்/உரை பெயர்ப்பாளர் அல்லது வேறு உதவி தேவைப்பட்டால் என்ன செய்வது?**

உங்களுக்கு மொழிபெயர்ப்பாளர், உரை பெயர்ப்பாளர் அல்லது வேறு உதவும் நபர் தேவைப்பட்டால், அத்தகு உதவியைப் பெற்றுத்தரக்கூடிய பள்ளி முதல்வரிடம் நீங்கள் கூறலாம்.

உங்கள் குழந்தை அரசுப்பள்ளிக்குச் செல்கிறதென்றால், நீங்கள் கல்வி மற்றும் பயிற்சித்துறையின் பிராந்திய அலுவலகத்தைத் தொடர்புகொண்டு கூடுதல் உதவியைப் பெறலாம்.

| | |
|---|---|
| வடகிழக்கு விக்டோரியா<br>தொலைபேசி: 1300 333 231<br>மின்னஞ்சல்: nevr@education.vic.gov.au | வடமேற்கு விக்டோரியா<br>தொலைபேசி: 1300 338 691<br>மின்னஞ்சல்: nwvr@education.vic.gov.au |
| தென்கிழக்கு விக்டோரியா<br>தொலைபேசி: 1300 338 738<br>மின்னஞ்சல்: sevr@education.vic.gov.au | தென்மேற்கு விக்டோரியா<br>தொலைபேசி: 1300 333 232<br>மின்னஞ்சல்: swvr@education.vic.gov.au |

**எனக்குக் கூடுதல் தகவல்கள் தேவையென்றால் என்ன செய்வது?**

கூடுதல் தகவல்களுக்கு இங்கே கல்வி மற்றும் பயிற்சித் துறையின் இணையதளத்துக்குச் செல்லலாம்.